ஆண்டு பட்டிகை வழக்கு எண்.128/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 128/2024 LW- 5 PW- 5

| | |
|---|---|
| Name | : ஆனந்த் (பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : சின்னத்தம்பி |
| Village | : சின்னையம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 44/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of March 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து உணவகம் நடத்தி வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் போலீசார் என்னிடம் கோட்டையூர் – நத்தம் சாலையில், சின்னையம்பட்டி பிரிவு அருகே நடந்த விபத்து சம்பவம் குறித்து போலீசார் விசாரணை செய்தார்கள். அப்பொழுது சாட்சியாக கையொப்பம் கேட்டதன் பேரில் நான் கையொப்பம் செய்தேன். **(பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) புகார்தாரர் சேகர் எனது உறவினர் என்றால் சரிதான். அவர் கேட்டுக் கொண்டதால் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எழுதாத

வெள்ளை பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரர் கேட்டுக் கொண்டதால்தான் இன்று சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். நான் போலீசாரிடம் சொன்னது போல் சொன்ன இடத்தில் வைத்து சொன்ன விதத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,
Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.05 15:12:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.128/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 128/2024 LW- 6 PW- 6

| | |
|---|---|
| Name | : ரவிச்சந்திரன் (பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : சின்னசாமி |
| Village | : சின்னையம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 54/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of March 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் போலீசார் என்னிடம் சின்னையம்பட்டி விலக்கில் நடந்த விபத்து சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக காவல் நிலையம் வர சொன்னதன் பேரில் காவல் நிலையம் சென்றிருந்தேன். விபத்து சம்பவம் குறித்து என்னிடம் விசாரணை செய்தார்கள். பின்னர் சாட்சியாக கையொப்பம் கேட்டதன் பேரில் நான் கையொப்பம் செய்தேன். **(பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 12.05.2024ம் தேதி 9.30 மணிக்கு நானும், ஆனந்தன் என்பவரும் சின்னையம்பட்டி பிரிவு அருகே இருந்தபோது நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சியாக கையொப்பம் கேட்டதன் பேரில் நானும், ஆனந்த் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதால் உண்மையை மறைத்து காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் நிலையத்தில் வைத்து எழுதப்படாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல-சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.05 15:12:36 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்